DINAMALAR

11 SEP 2022

PAGE 9

# ஓய்வூதியதாரர்களுக்கு இணையத்தில் புது வசதி

**புதுச்சேரி, செப். 11–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் ஓய்வூதியதாரர்கள் நலனுக்காக, இணையதளத்தில் புதிய வசதி துவக்கப் பட்டது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் அனைத்து ஓய்வூதிய ஆணைகளும், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் தங்களின் விபரங்களை இந்த முகப்பில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

ஓய்வூதியதாரர் ஆயுள் சான்றை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து பதிவேற்றினால் எங்கிருந்தும் அவர்கள் ஆயுள் சான்று சமர்ப்பிப்பதை எளிதாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மாதாந்திர ஓய்வூதிய ரசீது, வருமான வரிக்காக முழு ஆண்டு விபரம் உள்ள ஓய்வூதியபில் பதிவேடு பதிவிறக்கம் செய்யலாம். ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் தங்களின் படிவம் 16, 26 ஏ.எஸ்., ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த இணைய முகப்பை துணை வேந்தர் குர்மீத்சிங் திறந்து வைத்தார். இயக்குனர் தரணிக்கராசு, சிறப்பு அதிகாரி ராஜீவ் ஜெயின், பதிவாளர் அமரேஷ் சமந்தராய, நிதி அதிகாரி லாசர் ஆகியோர் கலந்து கொண்டனர்.